# 2. நெஞ்சம் இனிக்கிறது

**அலகு அறிமுகம்**

**ஒ**ரு நாட்டு மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், வரலாறு போன்றவற்றை அந்நாட்டு மக்களின் தொழில், கலை, விழாக்கள் போன்ற வற்றிலிருந்து புரிந்துகொள்ளலாம். தொழில், கலை, பண்டிகை இவற்றிற் கிடையே நெருங்கிய தொடர்பு உண்டு. பரம்பரைத் தொழில்களும் அவற்றோடு தொடர்புடைய விழாக்களும் கலைகளும் அழிவதால் சமூகத்தின் பண்பாட்டு வளர்ச்சியும் குன்றத் துவங்கிவிட்டது. தமிழர்களின் தொழில், அதோடு தொடர்புடைய பண்டிகைகள், விளையாட்டுகள் போன்ற வற்றை எடுத்துரைக்கும் வண்ணம் இந்த அலகு அமைக்கப்பட்டுள்ளது.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் என்ற பெருமைக்குரிய உழவர்களின் சிறப்பினை உலகிற்கு உணர்த்துவதாகத் தோன்றிய விழா பொங்கல் விழா என்றாலும் மனிதன் உயிர்வாழத் தேவையான உணவினை உற்பத்திச் செய்வதற்குக் காரணமான சூரியன், மாடுகள் இவற்றையும் இவ்விழா சிறப்பிக்கிறது. இவைபற்றிய செய்திகள் உழவர்களுக்கு ஒரு திருநாள் எனும் கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளன.

விழாக்கள் என்றாலே இனிப்புதானே! அவ்விழாவின்போது நாவிற்கும் மனதிற்கும் ஒரே போல் இனிமை தரும் கரும்பு தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாக **வாழ்வின் சுவை** எனும் பகுதி அமைந்துள்ளது.

தொழிலோ பண்டிகைகளோ பாடல்கள் இன்றி முழுமை பெறுவதில்லை. பாடல்கள் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருபவை. இவ்வண்ணம் **பொங்கல் கும்மி** எனும் தலைப்பில் ச. மீனாட்சிநாதன் அவர்கள் எழுதிய இனிமையும் சொல் நயமும் அமைந்த பாடல் இடம் பெறுகின்றது.

தமிழர்களின் வீரத்தை எடுத்துரைக்கும் விளையாட்டுகளான ஜல்லிக்கட்டு, சிலம்பம் போன்றவற்றை அறிந்துகொள்ள அலங்காநல்லூர் அனுபவம், சிலம்பம் எனும் பாடப்பகுதிகள் உதவுகின்றன.

வினை மற்றும் அதன் வகைகளான தெரிநிலை, குறிப்பு, ஏவல் ஆகியவை ஆசிரியர் மாணவர் உரையாடல் போன்று கொடுக்கப்பட்டு அதன் வழியாக இலக்கணச் செய்தியும் தரப்பட்டுள்ளது.

இந்த அலகைக் கற்பிக்கத் தேவையான காலம்
24 பிரிவேளைகள்.

# பாடத்திட்ட வலைச் சட்டம்

| கருத்துகள்/ திறன்கள்<br>மொழி வெளியீட்டு வடிவங்கள் | செயல்பாடுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ➢ தெளிவான உச்சரிப்பு, கட்டுரையின் அமைப்பு, மொழிநடை, கருத்து போன்றவற்றைப் புரிந்துகொண்டு வாசித்தல்<br>➢ தன்வரலாற்றின் அமைப்பு கூறும் முறை, தனித்தன்மைகள் கண்டுபிடித்தல்<br>➢ இராகம், மெட்டு, பாவனை, கருத்து போன்றவற்றை உட்கொண்டு கவிதை பாடுதல்<br>➢ வருணனை வாக்கியங்களால் கவிதை சிறப்படைகிறது<br>➢ விழாக்களைப் பற்றி அறிந்துகொள்கின்றனர். விழாக்களின் போது பல்வேறு விளையாட்டுகள் நடைபெறுகின்றன.<br>➢ சிறந்த மொழி நடையில் வாழ்த்து அட்டை தயாரித்தல்.<br>➢ விழாக்களில் வாழ்த்துக்கள் பரிமாறப்படுகின்றன<br>➢ பொருத்தமான படத்தொகுப்பு உருவாக்கல்<br>➢ கருத்துக்கள் தெளிவாகவும், பிறர் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அமைவதே சுவரொட்டி. | ➢ குறிப்பு எழுதுதல்<br>➢ வினாநிரல் தயாரித்தல்<br>➢ தன்வரலாற்றைக் கட்டுரையாக எழுதுதல்.<br>➢ பழமொழிகள் சேகரித்தல்<br>➢ இசையோடு கும்மியடித்துப் பாடுதல்.<br>➢ வருணனை சொற்கள் எழுதுதல்.<br>➢ சொற்றொடர் அமைத்தல்<br>➢ வாழ்த்து அட்டை தயாரித்தல்.<br>➢ இலக்கிய இதழ் தயாரித்தல்.<br>➢ படத் தொகுப்பு<br>➢ சுவரொட்டி தயாரித்தல். | ➢ கட்டுரையின் கருத்தை உட்கொண்டு குறிப்பு தயாராக்குகின்றனர்,<br>➢ வினாநிரல் தயாரிக்கின்றனர்.<br>➢ பிறமொழி வெளியீட்டு வடிவமாக மாற்றுகின்றனர் (தன்வரலாற்றை கட்டுரையாக மாற்றுதல்).<br>➢ கவிதையை இசையோடு பாடுகின்றனர்.<br>➢ கவிதையில் கூறப்பட்டுள்ள வர்ணனைச் சொற்களைக் கண்டுபிடிக்கின்றனர்.<br>➢ சொற்றொடர் அமைக்கின்றனர்.<br>➢ பொங்கல் வாழ்த்து அட்டை தயாரிக்கின்றனர்.<br>➢ படத்தொகுப்பு உருவாக்குகின்றனர்.<br>➢ சுவரொட்டி தயாரிக்கின்றனர்.<br>➢ ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடிக்கின்றனர். |

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- ☞ குறிப்பு தயாராக்குகிறார்கள்.
- ☞ வினா நிரல் தயாராக்குகிறார்கள்.
- ☞ தன்வரலாற்றை கட்டுரையாக எழுதுகிறார்கள்.
- ☞ பழமொழித் தொகுப்பு வெளியிடுகிறார்கள்.
- ☞ வாழ்த்து அட்டை தயாரிக்கிறார்கள்.
- ☞ படத்தொகுப்பு தயாரிக்கிறார்கள்.
- ☞ சொற்றொடர் அமைக்கிறார்கள்.
- ☞ சுவரொட்டி தயாரிக்கிறார்கள்.

**கற்றல் துணைக் கருவிகள்**

- ➲ விழாக்களின் படங்கள் அடங்கிய அட்டை
- ➲ பொங்கல் விழாத் தொடர்பான படங்கள் (கரும்பு, பானை, அடுப்பு, ஜல்லிக்கட்டு, சிலம்பம், கும்மிப் பாட்டு)
- ➲ வாழ்த்து அட்டைகள்
- ➲ பாடப்புத்தகம்



## ஆயத்தச் செயல்பாடு

உழவுத்தொழிலோடு தொடர்புடைய ஒரு பாடலைக் குழுவாகப் பாடிப் பாடப் பகுதிக்குள் நுழையலாம்

வியர்வை தரையில் சிந்தட்டும்
விரைந்து எழுந்து உழைப்போமே
எறும்பு போல உழைத்திடு
விரைவாய் வளரும் உலகமே!
சோம்பல் கொண்டு தூங்கினால்
சோற்றுக்குக் கூடத் திண்டாட்டம்
சேற்றினில் காலை வைத்தாலே
சோற்றினில் கையை வைக்கலாம்
நாட்டினில் எத்தனை வேலைகள்
நமக்காய் நாளும் இருந்திடுதே
பொழுது சாயும் வேளைவரை
பொழுது போக்கி வாழாதே!

மாணவர்கள் குழுவாகப் பாடியபின் ஆசிரியர் சில கேள்விகள் கேட்டு மாணவர் கள் பாடலைப் புரிந்துள்ளார்களா என அறியலாம்.

- நாம் எதற்காக உழைக்கவேண்டும்?
- நாம் எவ்வாறு உழைக்க வேண்டும்?
- சோற்றுக்குத் திண்டாடுவது எப்போது?

நாட்டின் முதுகெலும்பான உழவர்களைப் பெருமைப்படுத்தும் விதத்தில் அமைந் துள்ள 'உழவர்களுக்கு ஒரு திருநாள்' எனும் பாடப்பகுதியைக் குழந்தைகள் வாசிக்கட்டும். குழந்தைகள் பாடப்பகுதியைக் கவனமாக வாசித்துள்ளார்களா, கேட்டுள்ளார்களா என்பதை அறிய சில கேள்விகளை ஆசிரியர் கேட்கலாம்.

- தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாகப் பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது எது?
- தமிழர்களின் வழிபாடு எதை ஒட்டி அமைந்துள்ளது?
- சூரியனை வணங்கும்போது படைக்கும் பொருட்கள் யாவை?
- பொங்கல் நாட்களில் மாடுகளைச் சிறப்பிக்கக் காரணம் என்ன?
- பொங்கல் பண்டிகை உலகத்திற்கு உணர்த்துவது என்ன?

இதுபோன்ற கேள்விகளைக் கேட்டு மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்துப் பொருள் புரிந்துள்ளனரா என அறிதல்.

ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு மாணவர்கள் சுயமாகத் தமது பாடப்புத்தகத்தி லிருந்து விடை கண்டறிந்து நோட்டுப்புத்தகத்தில் எழுதுதல். நோட்டுப்புத்தகத்தில் எழுதியதை ஆசிரியர் மதிப்பிடலாம்.



## மதிப்பீடு

- முக்கியக் கருத்துகளைக் கண்டறிந்துள்ளான்.
- கருத்துகளைத் தொடர்புபடுத்தி எழுதியுள்ளான்.
- தேவையான சொற்களை, சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளான்.

## செயல்பாடுகள்

### குறிப்பு எழுதுதல்

மாணவர்களுக்கு நன்கு தெரிகின்ற விழாக்களின் பெயர்களைக் கூறச் செய்யுங்கள். பின்பு தமது பகுதியில் கொண்டாடப்படும் சிறப்பான ஓண விழாவைப் பற்றிக் குறிப்பு எழுதட்டும்; எழுதிய குறிப்பை வகுப்பில் வாசிக் கட்டும். பின்னர் குழுவாக இருந்து மேம்படுத்தட்டும். அதில் ஓணப் பண்டிகையோடு தொடர்புடைய ஊஞ்சல், புத்தாடை, மாவேலி மன்னன், பூக்களம், வள்ளம் களி, ஓணப்பந்து போன்றவற்றை மனதில் கொண்டு எழுதி யுள்ளார்களா எனப் பார்க்கவும். சுய மதிப்பீடாகவும் சக மதிப்பீடாகவும் இச்செயல்பாட்டை அளிக்கலாம்.

> கருத்துகளைத் தெளிவான முறையில் வெளியிடும்போது குறிப்பு சிறப்படைகிறது.

### மேம்படுத்துதலில் தவிர்க்க வேண்டியவை

- எழுத்துப் பிழை
- இலக்கணப் பிழை
- வாக்கியப் பிழை
- கருத்துப்பிழை

கீழ்வரும் பகுதியில் அமைந்த பிழைகளைக் கண்டறிந்து திருத்தச் சொல் லுங்கள்.

கேரளாவில் பல வருடங்களாக கொண்டாடும் விழா ஓண விழா. ஓணத்திற்கு பத்து நாட்கள் லீவு கிடைக்கிறது. பண்டைக் காலத்தில் மாவேலி மன்னர் கேரளத்தை ஆண்டதாகக் கூறுகின்றனர். ஓணம் என்றாலே கொண்டாட்டம்தான். கேரளாவில் அத்தம் முதல் நாள் துவக்கி பத்து நாள் கேரளாவில் இப்பண்டிகை மிக விமரிசையாகக் கேரளாவில் கொண்டாடப்பட்டு வருகின்றனர். இந்நாட்களில் வள்ளங்களி, ஊஞ்சல், ஒணப்பந்து போன்றவை விழையாடப்படும் அன்று காலையிலேயே குளித்துப் புத்தாடை அணிவோம். புத்தாடை அணிந்து பொங்கலைக் கொண்டாடுவோம். ஓணம் கேரள மாநிலத்தின் தேசிய விழாவாகும்.

- இலக்கணப் பிழை / முக்காலங்கள்
  கொண்டாடும் - கொண்டாடப்பட்டு வரும்
- கருத்துப் பிழை
  ஓணத்திற்கு - ஓணத்தை முன்னிட்டு
- வாக்கிய அமைப்புப் பிழை
  மாணவர்களுக்கு (மாதுக்கு எனத் தெளிவில்லாமல் இருந்தது)
- பிறமொழிச் சொல் / இலக்கணப் பிழை
  லீவு - விடுமுறை
- வாக்கிய அமைப்புப் பிழை
  ஆண்டதாகக் கூறுகின்றனர் - ஆண்டார்
- ஒரே சொல் மறுபடியும் தேவையின்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது
  கேரளாவில் எனும் சொல் மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாக்கியத்தில் ஒரு முறை பயன்படுத்தினால் போதும்.
- இலக்கணப் பிழை / பால் வேற்றுமை அறியாமை
  கொண்டாடப்பட்டு வருகின்றனர் - கொண்டாடப்பட்டு வருகின்றது
- குறில் / நெடில் பிழை / எழுத்துப்பிழை
  ஒணப்பந்து - ஓணப்பந்து
- எழுத்துப்பிழை / உச்சரிப்புப் பிழை
  விழையாடப்படும் - விளையாடப்படும்
- எழுத்துப்பிழை / இணைச் சொற்கள் பிழை
  காலை யிலேயே - காலையிலேயே
- கருத்துப்பிழை
  பொங்கல் - ஓணவிழாவை
- எழுத்துப்பிழை / இணைச் சொற்கள் பிழை
  கொண்டு ஆடுவோம் - கொண்டாடுவோம்.

- **எழுத்துப்பிழை**

  துணையெழுத்துக் குறைபாடு
  ஒற்றெழுத்துக் குறைபாடு
  குறியீடுகளின் குறைபாடு
  உச்சரிப்புக் குறைபாடு
  ஏற்ற நிறுத்தற்குறிகளின் குறைபாடு
  இணைச்சொற்கள் குறைபாடு

- **இலக்கணப் பிழை**

  ஒருமை, பன்மை
  முக்காலங்கள்
  பேச்சு மொழி வழக்கு, பிறமொழிச் சொற்கள்
  பால் வேற்றுமை அறியாமை (ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின்பால்)
  உயர்திணை, அஃறிணை

- **வாக்கிய அமைப்புப் பிழை**

  ஒரு சொற்றொடரில் ஒரே சொல்லைத் தேவையின்றி மறுபடியும் பயன்படுத்துதல்.

  சில நேரங்களில் வாக்கியத்திற்குப் பொருள் தரக்கூடிய சொற்களைப் பயன்படுத்தாமல் இருத்தல்.

  வாக்கியங்களில் முன்னுக்குப் பின்னாகச் சொற்களைப் பயன்படுத்துதல்.

- **கருத்துப்பிழை - திருத்தம்**

  குழுச் செயல்பாடுகளில் ஒவ்வொருவரும் வாசிக்கும் போது கருத்துப்பிழைகளைக் கண்டறிந்து திருத்தச் செய்யலாம்.

மாணவர்கள் பாடப்பகுதியை வாசித்துள்ளார்களா என்பதை அறிந்து கொள்ளும் விதம் இச்செயல்பாடு அளிக்கப்பட்டுள்ளது. மாணவர்களைத் தனித்தனியாகக் கூறச் செய்துவிட்டுப் பின்னர் நோட்டுப்புத்தகத்தில் எழுதச் செய்யலாம். மாணவர்கள் பொங்கல் விழாவைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்வதற்காக இச்செயல்பாடு அளிக்கப்பட்டுள்ளது. இதனை வீட்டுப்பாடமாகக் கொடுக்கலாம்.

### வாழ்வின் சுவை

கரும்பு தன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதாக அமைகின்றது இப்பாடப்பகுதி. பிறருக்காக வாழ்வது நமது வாழ்க்கையின் சுவையை அதிகரிக்கச் செய்கிறது.

மாணவர்களை இரண்டு மூன்று முறை பாடப்பகுதியை வாசிக்கச் செய்தல்.

## செயல்பாடுகள்

**வினாநிரல் தயாரிக்கவும்** – விடைகளைக் கண்டுபிடித்து எழுதக் கூறுங்கள். வினாக்கள் நம் சிந்தனையின் வெளிப்பாடுகள். நாம் ஏதேனும் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கும்போது அதனைப் பற்றி மேலும் அறிய, அறிந்தவற்றை உறுதிப்படுத்த நம் மனதில் வினாக்கள் ஊற்றெடுக்கின்றன. எனவே, குழந்தைகளிடம் கேள்வி கேட்கும் திறனையும் அதற்கேற்ற பதிலளிக்கும் திறனையும் உருவாக்க வேண்டும். பாடக்கருத்தைக் குழந்தைகள் பெற்றுள் ளனரா என்பதை அறிய இச்செயல்பாடு உதவுகிறது. ஆசிரியர் வினாநிரலை மதிப்பீடு செய்யவேண்டும்.

### வினாநிரல் தயாரிக்கும் பல்வேறு நிலைகள்



- கொடுக்கப்பட்ட கருத்து வந்தடையும் வண்ணம் வினாக்கள் அமைதல் வேண்டும்.
- குறிப்பிட்ட நேரத்தில் கேட்கும் எண்ணம் வேண்டும்.
- இயன்ற அளவு பாடப்பகுதியுடன் தொடர்புடைய வினாக்கள் உருவாக்குதல்.
- குழுவாக அவற்றைத் தொகுத்தல்.
- வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தெரிந்துவைத்தல்.
- அடுத்த குழுவிடம் வினாக்கள் கேட்டல்.
- சரியான பதிலுக்குப் புள்ளிகள் கொடுத்தல்.
- தவறான பதிலுக்கு அடுத்த குழுவிடம் கேட்டல்.
- பதில் யாரும் சொல்லாவிட்டால் கேள்விகேட்ட குழுவே விடையளித்தல்.
  வெற்றி பெற்றோரைப் பாராட்டுதல்.

## தன்வரலாற்றைக் கட்டுரையாக மாற்றுதல்

ஒரு மொழி வெளியீட்டு வடிவத்தை வேறொரு மொழி வெளியீட்டு வடிவமாக மாற்றுதல். இச் செயல்பாட்டைக் குழுச் செயல்பாடாக அளிக்கலாம். குழுக்கள் கட்டுரையை வகுப்பில் வெளியிடட்டும்.

பின்னர் ஆசிரியர், தாம் எழுதிய கட்டுரையை மாணவர்களை வாசிக்கச் செய்து

தங்கள் கட்டுரையை மேம்படுத்தச் செய்யலாம். இதற்கான சில குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வாக்கிய அமைப்புகள் எவ்வாறு மாற்றப்படுகின்றன என்பதற்கு உதாரணமாக மூன்று சொற்றொடர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்று வாழ்க்கை வரலாற்றை மாணவர்கள் கட்டுரையாக மாற்ற ஆசிரியர் உதவ வேண்டும்.

- ☐ நான் புன்செய்த் திடல்களிலும் நன்செய் வயல்களிலும் நடப்படுகிறேன். (தன்வரலாறு)
- ☐ கரும்பு புன்செய் திடல்களிலும் நன்செய் வயல்களிலும் நடப்படுகிறது. (கட்டுரை)
- ☐ ஆண்டுப் பயிராக வளரும் நாங்கள் முற்றியபின் சர்க்கரை ஆலைக்கு அனுப்பப்படுகிறோம் (தன்வரலாறு)
- ☐ ஆண்டுப் பயிராக வளரும் கரும்பு முற்றிய பின் சர்க்கரை ஆலைக்கு அனுப்படுகிறது. (கட்டுரை)
- ☐ எங்களைப் போலவே நீங்களும் பிறருக்காக வாழக்கற்றுக் கொள்ளுங்கள். (தன் வரலாறு)
- ☐ கரும்புப் பயிரைப் போன்று நாமும் பிறருக்காகவும் வாழக் கற்றுக் கொள்வோம். (கட்டுரை)

**கட்டுரை எழுதும்போது**



- *கட்டுரையின் பொருள் (முன்னுரை)*
- *வாக்கியங்களின் அமைப்பு*
- *பிழையின்றி எழுதுதல்*
- *தனித்தனி உப தலைப்புகள்*
- *விளக்கமான நடை*
- *முடிவுரை (கருத்துகளின் தொகுப்பு)*

மாணவர்கள் சுயமாக எழுதிய கட்டுரையை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

## பழமொழிகள்

### சில பழமொழிகள்

- ☐ ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை
- ☐ கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தானே வரும்
- ☐ கரும்பு தின்னக் கூலியா?
- ☐ கரும்புத் தோட்டத்திற்குள் யானை புகுந்தது போல்

மாணவர்களைத் தங்களுக்குத் தெரிந்த கரும்பைப் பற்றிய பழமொழிகளை நோட்டுப்புத்தகத்தில் எழுதச் செய்தல். மாணவர்கள் எழுதிய பழமொழிகளை இனிக்கும் மொழிகள் என்னும் தலைப்பில் தொகுப்பாக வெளியிடுங்கள். பழமொழிகளை வாசிக்கச் செய்தல், பிழைதிருத்தி எழுதச் செய்தல். பழமொழிக் கேற்ற விளக்கங்களைக் கண்டறிந்து அதனைக் குழுவாக வெளியிடுதல் நன்று.

### இசையோடு கும்மியடித்துப் பாடுதல்

பாடலைத் தனியாகப் பாடுதல்; பின்னர்க் குழுவாகப் பாடுதல்.

குழுக்களைக் கும்மியடித்துப் பாடச் செய்தல், குறுந்தகட்டையும் காண்பிக் கலாம்.

பாடலை அறிமுகப்படுத்தும் முன் பாடலோடு தொடர்புடைய சில கேள்வி களைக் கேளுங்கள்.

குழந்தைகள் பதில் கூறட்டும். பாடலின் கருத்துகளைப் புரிந்துள்ளனரா என அறிய உதவும் விதம் கேள்விகள் அமையவேண்டும்.

- பொங்கல்பானையில் கட்டும் பொருட்கள் யாவை?
- சூரியன் எப்போது உதிக்கும்?
- நன்றிக்கு வித்தாகும் விழா எது?
- பொங்கலில் சிறப்பிக்கப்படும் மிருகம் எது?

போன்ற கேள்விகள் கேட்கலாம். குழந்தைகள் பதில் கூறட்டும்.

குழுக்களாகப் பிரிந்து இராகத்துடன் பாடலைப் பாடச் செய்யுங்கள். நல்ல மெட்ட மைத்த குழுக்களைப் பாராட்டுங்கள். பின்னர் ஆசிரியர் மதிப்பீடு செய்ய வேண்டும்.



### மதிப்பீடு

இராகம், தாளம், பாவனை, மெட்டு இவைகளைக் கொண்டு ஆசிரியர் பாடலை மதிப்பீடு செய்யலாம்.

### ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுதல்

பாடலை இசையோடு வாசிக்கும் போது ஒத்த ஓசையுடைய சொற்களை அடையாளம் காணச் செய்தல். அவற்றை மாணவர்கள் தமது பாடப் புத்தகத் தில் எழுதச் செய்யவும். தொடர்ந்து பிற சொற்களையும் கண்டுபிடித்து அவர் களது நோட்டுப்புத்தகத்தில் எழுதச் சொல்லவும்.

| | | |
|---|---|---|
| நீங்கிடவே | - | குலுங்கிடவே |
| ஆர்த்திடவே | - | படைத்திடவே |
| போற்றிடவே | - | அளித்திடவே |

**வருணனைச் சொற்களை எழுதுங்கள்**

முதலில் பாடப்பகுதியை வாசித்து வருணனைச் சொற்களைக் குழந்தைகள் அடையாளப்படுத்தட்டும். அவற்றைப் பாடப்புத்தகத்திலும் நோட்டுப் புத்தகத்திலும் எழுதட்டும். வருணனைச் சொற்களைப் பொருள்படும்படி விவரித்து எழுதச் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| காலைக் கதிரவன் | - | காலை நேரக் கதிரவன் |
| வண்ண வளையல்கள் | - | பல நிறங்களில் உள்ள வளையல்கள் |
| செங்கரும்பு | - | |
| இளங்குயில் | - | |
| ஒளிர் பகலவன் | - | |
| பசு மஞ்சள் | - | |
| உயர் உழவன் | - | |

**அலங்காநல்லூர் அனுபவம்**

அலங்காநல்லூர் என்ற ஊரில் வசிக்கும் தனது நண்பனின் வீட்டிற்குச் சென்று சல்லிக்கட்டு எனும் வீரவிளையாட்டைப் பார்த்து வியந்த ஓர் மாணவனின் அனுபவம் இது. பாடத்திற்குள் நுழையும் முன் சில கேள்விகள் கேட்டு, அவர்களைப் பாடச் சூழ்நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

- உங்கள் ஊரில் நடைபெறும் ஒரு விழாவைக் கூறுங்கள்
- பறவைகள், விலங்குகள் பங்குபெறும் விழாக்கள் எவை?
- சல்லிக்கட்டு என்ற விளையாட்டை நீ பார்த்ததுண்டா?

போன்ற கேள்விகளைக் கேட்கவும். குழந்தைகள் பதில் கூறட்டும். ஆசிரியர் பாடப்பகுதியை ஏற்ற இறக்கத்துடன் வாசிக்கவும். மாணவர்கள் கவனித்துக் கேட்கட்டும்.

பாடப்பகுதியை வாசித்து முடித்தபின் கருத்துடன் புரிந்து கொண்டார்களா என அறிய சில கேள்விகள் கேட்கலாம்.

- சல்லிக்கட்டு என்பதற்குப் பெரியவர் அளித்த விளக்கம் என்ன?
- அகிலனும் மதனும் விளையாடிக் கொண்டிருந்தபோது ஒலி பெருக்கியில் கேட்ட அறிவிப்பு என்ன?

- ☼ அகிலன் ஆர்வத்துடன் பெரியவரிடம் கேட்ட கேள்வி என்ன?
- ☼ காளையை அடக்கிய இளைஞனுக்குக் கிடைத்தது என்ன?

இக் கேள்விகளையும் அதற்கான விடைகளையும் நோட்டுப்புத்தகத்தில் எழுதச் செய்யலாம்.

### சொற்றொடர் அமைக்க

மொழித்திறனை வளர்ப்பதற்காகக் கொடுக்கப்பட்ட ஒரு செயல்பாடு ஆகும். கொடுக்கப்பட்ட சொல்லைக் கோவையாக்கி ஒரு சொற்றொடர் எழுதச் செய்யுங்கள். இச்செயல்பாட்டின் நோக்கம் குழந்தைகள் சுயமாகச் சொற்றொடர்களை எழுத வேண்டும் என்பதாகும். எழுதிய சொற்றொடர்களை ஆசிரியர் மதிப்பீடு செய்யவேண்டும்.

- ☐ மேகமூட்டம்
  மைதானம் எங்கும் மேகமூட்டம் போல் புழுதி பறக்கக் காளைகள் சீறிப்பாய்ந்தன.
- ☐ ஆரவாரத்தோடு
  சல்லிக்கட்டு நடந்து கொண்டிருக்கும் வேளையில் காளையை யார் அடக்குவார்கள் என்று மைதானத்தில் இருந்த மக்கள் ஆரவாரத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

## கேள்விகளுக்குச் சரியான பதிலைக் கட்டத்தில் அடையாளப்படுத்தவும்.

### கேள்விக்கான பதில்

- ☑ அலங்காநல்லூர்
- ☑ மதன்
- ☑ ஜல்லிக்கட்டு
- ☑ சண்டி
- ☑ பொங்கல்
- ☑ வாடிவாசல்
- ☑ மாதர்கள்

### சிலம்பம்

தமிழர்களின் வீரவிளையாட்டுகளில் ஒன்றான சிலம்பம் பற்றி அறிந்துகொள்ள இப்பாடப்பகுதி உதவுகிறது.

## வாழ்த்து அட்டை தயாரித்தல்

குழுவாகப் பிரித்துக் குழுக்கள் கலந்துரையாடித் தொடர்புடைய படங்களை வரைந்து எளிமையான பொங்கல் வாழ்த்துகளை எழுதி அவர்களது நண் பர்களிடம் கொடுக்கச் செய்யுங்கள். வகுப்பில் வைத்து வாழ்த்து அட்டைகள் உருவாக்கும் போது ஆசிரியர் மேற்பார்வை செய்ய வேண்டும். சிறந்த வாழ்த்து அட்டை தயாரித்த குழுவைப் பாராட்ட மறக்கவேண்டாம். இதனைக் கலைக்கல்வியின் பாகமாகவும் செய்யலாமல்லவா.

தொடர் செயல்பாடாகப் பிற பண்டிகைகளுக்கான வாழ்த்து அட்டைகள் தயாரிக்கச் செய்யலாம்.

### பொங்கல் வாழ்த்து மாதிரி

பொங்கும் பொங்கலைப் போல

தித்திக்கும் கரும்பைப் போல

மஞ்சளின் மணம் போல

உங்கள் வாழ்க்கை தித்திப்போடு

அமைய என் இனிய பொங்கல் வாழ்த்துகள்!

## செய்தித்துணுக்குகள் / படங்கள் அடங்கிய இலக்கிய இதழ்

செய்தித்தாள்கள், புத்தகங்கள், சிறப்பு மலர்கள், படத்தொகுப்பு, பள்ளி நூலகப் புத்தகங்கள் போன்றவற்றிலிருந்து துணுக்குகளை எழுதவும், பொங்கலோடு தொடர்புடைய படங்களைத் தனித்தனியாகச் சேகரிக்கவும் சொல்லுங்கள். குழுவில் வெளியிட்டு அதனை மேன்மைப்படுத்தி, ஆசிரியரின் மேற்பார்வை யில் இலக்கிய இதழ் வெளியிடட்டும்.

## படத்தொகுப்பு

சல்லிக்கட்டு விளையாட்டுடன் தொடர்புடைய படங்களைச் சேகரித்துப் படத் தொகுப்பு உருவாக்கச் செய்யவும். மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது படத்தொகுப்பில் இதனை ஒட்டி வைக்கட்டும்.

### சுவரொட்டி தயாரித்தல்

பள்ளியில் நடக்கும் ஓணவிழாவுக்குச் சுவரொட்டி தயாரிக்க மாணவர்கள் குழுவாகப் பிரிந்து சுவரொட்டியில் என்னென்ன இடம்பெற வேண்டுமெனக் கலந்துரையாடட்டும். ஆசிரியர் சிறுசிறு உதவிகள் செய்யலாம்.

- ☐ நிகழ்வு இடம் நாள் நேரம்
- ☐ சுருக்கமான சொல்லமைப்பு
- ☐ கவனத்தைக் கவரும் வடிவமைப்பு



### மதிப்பீடு

கருத்துகளைத் தெளிவாகவும் பிறர் கவனத்தை ஈர்க்கக் கூடியதாகவும் கவர்ச்சியானதாகவும் வெளியிடுவார்களல்லவா? இதனடிப்படையில் தரநிர்ணயம் செய்யுங்கள்.

### சுவரொட்டி மாதிரி



**இலக்கணப்பகுதி**

தெரிநிலை, குறிப்பு, ஏவல் வினைமுற்று

இலக்கணப்பகுதியை மாணவர்கள் புரிந்து கொண்டனரா என்பதனை அறிவதற்காக மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பாடப்பகுதியில் உள்ள வினைமுற்றுக்களைத் திரட்டி எழுதச் செய்யுங்கள். அதிகமாகத் திரட்டும் மாணவனை/குழுக்களைப் பாராட்டுங்கள்.

ஏவல் வினைமுற்று தொடர்களைத் தனியாக மாணவர்களை எழுதவைத்து அதனை வாக்கியத்தில் அமைப்போம் என்ற செயல்பாட்டில் கொண்டு வரலாம்.

**நான் கற்றுக்கொண்டவை**

பாடப்பகுதியின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள இந்த அட்டவணையைப் பூர்த்தி செய்யும் முன் மாணவர்களை இந்தச் செயல்பாடுகளின் ஊடாகக் கடந்து வரச்செய்துள்ளேன் என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்னரே மாணவர்களிடம் எழுதச் சொல்லவும்.

**படைப்புத் தொகுப்பு**

- பழமொழிகளைத் தொகுத்து வெளியிடுதல்
- வாழ்த்து அட்டை தயாரித்தல்
- படத்தொகுப்பு தயாரித்தல்
- சுவரொட்டி தயாரித்தல்.

## அலகு மதிப்பீடு (மாதிரி)

1. பள்ளியில் மாணவர் தலைவனின் பிறந்தநாளை முன்னிட்டு 5ஆம் வகுப்பு மாணவர்கள் அவனுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக வாழ்த்து அட்டை தயாரிக்கத் தீர்மானித்தனர். அவர்கள் தயாரித்த வாழ்த்து அட்டைகளைப் போன்று நாமும் தயாரிப்போமா?

2. “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்”

   “ஆடிப்பட்டம் தேடிவிதை” -இப் பழமொழிகள் எவற்றோடு தொடர் புடையவை? இவைபோன்று வேறு பழமொழிகள் எழுதுங்கள்.

3. கரும்பு விவசாயி ஒருவர் நமது பள்ளிக்கு வருகை தருகிறார். அவரிடம் கரும்பு விவசாயம் பற்றித் தெரிந்து கொள்வதற்காக நாம் நடத்தும் நேர்காணலில் கேட்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

3. நமது பள்ளியில் நடைபெறும் ஓணவிழாவை முன்னிட்டுப் பள்ளிக்கு அருகே வைப்பதற்காகச் சுவரொட்டி ஒன்றைத் தயாரிக்கவும்.

5. பூட்டைத் திறப்பது கையாலே- நல்ல
   மனம் திறப்பது மதியாலே!
   பாட்டைத் திறப்பது பண்ணாலே -இன்ப
   வீட்டைத் திறப்பது பெண்ணாலே!
   ஏட்டைத் துடைப்பது கையாலே -மன
   வீட்டைத் துடைப்பது மெய்யாலே!
   வேட்டை அடிப்பது வில்லாலே - அன்புக்
   கோட்டை பிடிப்பது சொல்லாலே!

   இப்பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களைப் பட்டியல் இடுங்கள்.